## விழுப்புரம் மாவட்டம் – வழுதரெட்டியில்

# ஏ.கோவிந்தசாமி நினைவு அரங்கம்; சமூக நீதிப் போராளிகள் மணிமண்டபம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**விழுப்புரம், ஜன. 28 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.5 கோடியே 70 இலட்சம் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 21 சமூகநீதிப் போராளிகள் மணிமண்டபம் ரூ.4 கோடி செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவு அரங்கம் இரண்டையும் இன்று (28.1.2025 ) திறந்து வைக்கிறார்.**

முதலமைச்சர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற கடந்த மூன்றரை ஆண்டுகளில், நாட்டிற்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்ட பெருமக்களின் தியாகங்களைப் போற்றி அவர்களுடைய சிலைகளையும் மணிமண்டபங்களையும், அரங்கங்களையும் அமைத்து வருங்கால இளைஞர்கள் அறிந்து உணர்ந்து பின்பற்றும் வண்ணம் 10க்கும் மேற்பட்ட நினைவரங்கங்களையும் 37 திருவுருவச் சிலைகளையும் திறந்து வைத்துள்ளார். மேலும் பல சுதந்திரப்போராட்டவீரர்களுக்கும்,தியாகிகளுக்குமான நினைவுச் சின்னங்களையும் அமைத்து வருகிறார்கள். இவை இந்தியாவிற்கே வழிகாட்டத் தக்கவையாகும்.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (28.1.2025 - செவ்வாய்க்கிழமை) விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வழுதரெட்டி கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவு அரங்கம் மற்றும் இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் நீத்த 21 சமூக நீதிப் போராளிகள் மணிமண்டபம் இரண்டையும் திறந்து வைக்கிறார்கள்.

**21 சமூகநீதிப் போராளிகள் மணிமண்டபம்!**

வகுப்புரிமை எனும் இட ஒதுக்கீட்டு முறை நூறாண்டுகளுக்கு முன் நீதிக்கட்சி ஆட்சியில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால், அதுவரை ஒடுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் முடக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, முதலிய சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தொடர்ச்சியாக இந்த ஒதுக்கீட்டு முறை செல்லாது என சென்னை உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் தீர்ப்புகள் வழங்கின. அதன் காரணமாக தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தியத் துணைக் கண்டத்தையே கவனிக்க வைத்த இந்த பெரும் போராட்டம் காரணமாக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அதனை அன்றைய பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்களிடத்திலே எடுத்து வலியுறுத்தியதன் பயனாக இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இடஒதுக்கீட்டு முறை மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது.

இத்தகைய சமூக நீதிக்கான தொடர்ச்சியான போராட்டங்களின் வரிசையில் 1987ஆம் ஆண்டு 20 விழுக்காடு தனி இடஒதுக்கீடு கோரி வட தமிழகத்தில் நடைபெற்ற போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தப் போராட்டத்தில் அன்றைய அரசின் காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான 21 சமூக நீதிப் போராளிகளின் உயிர்த் தியாகத்திற்கும் போராட்டத்திற்கும் நியாயம் வழங்கிடும் வகையில், 1989ஆம் ஆண்டு அமைந்த முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கு 20



விழுக்காடு இடஒதுக்கீட்டினை வழங்கி கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சம வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அது மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களின் முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துத் தந்தது.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற அந்த இடஒதுக்கீடு போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான 21 சமூக நீதிப் போராளிகளின் தியாகத்தைப் போற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் 2.9.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண். 110 இன் கீழ் அறிவித்தவாறு விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டியில் ரூபாய், 5 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது.

**முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவு அரங்கம்!**

முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்கள் 1918ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் தேதி புதுச்சேரியில் உள்ள தேங்காய்திட்டு கிராமத்தில் ஆனையப்பர் - மீனாட்சி அம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆதரவோடு 1952ஆம் ஆண்டில் விக்கிரவாண்டி தொகுதியில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.கோவிந்தசாமி அவர்கள், “குலக் கல்வித் திட்டம் எதிர்ப்பு”, “தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கைக்கு ஆதரவு”, “திராவிட நாடு திராவிடருக்கே” போன்ற முழக்கங்களைச் சட்டமன்றத்தில் எழுப்பியவர்.

பின்னர், 1957ஆம் ஆண்டிலும், 1967ஆம் ஆண்டிலும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையிலும் 1969ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையிலும் வேளாண் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார்.

ஏ.கோவிந்தசாமி அவர்கள் அமைச்சராகத் திகழ்ந்தபோது, “நந்தன் கால்வாய்த் திட்டம்”, “மீன்பிடி துறைமுகம்”, “பால் பவுடர் தொழிற்சாலை”, “கோழிப்பண்ணைத் திட்டம்”, எனப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினார். மேலும், முதியவர்களுக்கு நிதியுதவித் திட்டம் அமைத்தல், குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி, சிற்றூர்களில் மருத்துவமனை, உழவர்களுக்கு உதவி வழங்குதல், ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குதல் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஏ.ஜி. என புகழப்பட்ட ஏ.கோவிந்தசாமி அவர்களைக், “கொள்கைக் குன்றம்” என்று போற்றியுள்ளார். ஏ.ஜி அவர்களின் கல்விப் பங்களிப்பினைப் போற்றும் வகையில் திண்டிவனத்தில் தொடங்கப்பட்ட அரசு கலைக் கல்லூரிக்கு, “ஆ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி” எனப் பெயர் சூட்டினார்.

ஆடம்பரத்தின் நிழல் சிறிதும் படராத எளிய குணத்தாலும், நிறைந்த புகழாலும், அனைவராலும் விரும்பப்பட்ட ஏ.கோவிந்தசாமி அவர்கள், 1969ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் நாள் இயற்கை எய்தினார். சென்னை பெசன்ட் நகர் இடுகாட்டில் அரசு மரியாதையுடன் ஏ.ஜி அவர்களது உடல் அடக்கம் செய்யப்பட்டபோது தந்தை பெரியார் அவர்கள் தம் உடல் நிலை சரியில்லாத போதும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார் என்பது இவருடைய பெருமைக்கு மேலும் புகழ் சேர்ப்பதாகும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, முன்னாள் அமைச்சர் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களின் பெருமையினை நினைவுகூரும் வகையில் விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் நினைவு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டியில் தமிழ்நாடு அரசின் சார்பில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்கள் நினைவு அரங்கத்தையும், 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற இடஒதுக்கீடு போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான 21 சமூக நீதிப்போராளிகளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபத்தையும் இன்று ( 28.1.2025 -செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணிக்குத் திறந்துவைத்துச் சிறப்பிக்கிறார்.

---

## குடியரசு தின விழா அணிவகுப்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஊர்திக்கு முதல் பரிசு!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு கேடயம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!

**சென்னை, ஜன. 28 -**

**குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கும், அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற துறைகளுக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேடயங்களை வழங்கி வாழ்த்தினார்.**

சென்னை, காமராசர் சாலையில் நேற்று முன்தினம் (26.01.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள், தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மை விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய பதக்கங்களையும், கோப்பைகளையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகளையும், தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமிய கலை நிகழ்ச்சி களையும், பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினையும் பார்வையிட்டார்கள்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியில், முதல் பரிசு பெற்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கேடயத்தை வழங்கி வாழ்த்தினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற பள்ளி மாணவியர்களின் கலை நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்ற கொளத்தூர், எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கும், இரண்டாம் பரிசு பெற்ற மயிலாப்பூர், சிறுவர் தோட்டம் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கும், மூன்றாம் பரிசு பெற்ற அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கும் கேடயங்களையும்;

கல்லூரி மாணவியர்களின் கலை நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்ற இராணி மேரி கல்லூரி மாணவியர்களுக்கும், இரண்டாம் பரிசு பெற்ற கொளத்தூர், சோகா இகேதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி மாணவியர்களுக்கும், மூன்றாம் பரிசு பெற்ற குரோம்பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் கல்லூரி மாணவியர்களுக்கும் கேடயங்களை வழங்கி வாழ்த்தினார்.

குடியரசு நாள் விழாவில், அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியில், முதல் பரிசு பெற்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோருக்கும்,

இரண்டாம் பரிசு பெற்ற காவல் துறையின் சார்பில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை கூடுதல் ஆணையர் என். கண்ணன் ஆகியோருக்கும்,

மூன்றாம் பரிசு பெற்ற இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், இணை ஆணையர் ச. இலட்சுமணன் ஆகியோருக்கும் முதலமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத்துறை துணைச் செயலாளர் (மரபு) திருமதி ஜெ.இ. பத்மஜா, பள்ளிக்கல்வி இயக்குநர் கண்ணப்பன், அரசு உயர் அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.